மில்க்வைற் செய்தி

Milk White News

தபாற்பெட்டி இல: 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆனி 1980 ★ இதழ் - 54

★ திருவள்ளுவர் விழா ★

உலகப் புலவர் என்றும், உலகம் முழுவதும் ஒரு குடும்பம் என வாழ வழிவகுத்தவர் என்றும், உயர்ந்தோர் போற்றும் ஒப்பற்ற தமிழ்ப்புலவர் திருவள்ளுவர். அவரின் இயற்பெயர் இன்னதுதான் என்று அறியாமல் அவருக்குப் பத்துத் திருநாமங் களை அறிஞர்கள் ஆராமையோடு வழங்கி வணங்குவர். அவர் செய்த "உலகுக்கொரு நீதி" என்ற ஒப்பற்ற திருக்குறளுக்கும் பத்துக்கு மேற்பட்ட திருநாமங்கள் வழங்குவர். அதற்குப் பழைய காலத்திலேயே பத்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் உரைவிளக்கஞ் செய்துள்ளார்கள்.

தமிழறியாப் பிறநாட்டவர் பலரும் திருக்குறளைத் தத்தம் மொழியில் மொழிபெயர்த்துப் படித்து வருவதால், தமிழிலும் பார்க்கத் திருக்குறளுக்கே உலகவியாபகம் அதிகமாயுள்ளது. உலகமுவப்ப ஒரு நீதி சொன்ன திருவள்ளுவரைத் தினந்தோறும் நினைத்தல் நம் கடன். அவரின் குறள்வழி நடப் பது நம் நடையாதல் வேண்டும்.

இவ்வாண்டு யாழ். செயலக கலாசார மன்றமும், பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் தமிழ் மறைக்கழகமும் வள்ளுவர் விழாவை வெகு சிறப்பாக நடத்தினர்கள். கலாசார மன்றம் நடத்திய விழாவில் பாடசாலை மாணக்கர், மாணக்கியர் பெரும் பங்குபற்றித் தங்கள் பேச்சாற்றல், எழுத்தாற்றல் நினைவாற்றல் ஆகிய திறமைகளுக்குத் தூக்கமுடியாத பரிசுகளைத் தூக்கிச்சென்றார்கள். இப்பரிசுபெற்றவர்களை இதய பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 24-5-80 சனிக் கிழமை நடைபெற்ற விழாவுக்கு வள்ளுவரின் மிகப் பெரிய படத்தினை உதவியும் விழா மலரினை இலவச மாக அச்சிட்டு வழங்கியும் உதவிய மில்க்வைற் தொழி லதிபரின் திருக்குறட் பற்று பாராட்டவேண்டியது.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)



திருநெல்வேலி சைவச் சிறுமிகள் இல்லத்தில் பன்னை வேலைக்குப் பயன்படும் "பனையோலை வாரும் கருவியை" மில்க்வைற் தொழிலதிபர் புதுவருடப்பிறப்பன்று அன்பளிப்பாக வழங்கினர்.

★ பேச்சை வெல்ல வல்லது மௌனம் ★

உங்களுக்குத் தெரியுமா ??

எனப்படுவது	எது?
52. பகோடா	சீனரின் கோபரம்
53. இழுபடும் பிசின்	றப்பர்
54. பாலைவனக்கப்பல்	ஒட்டகம்
55. சைபீரியாவின் மறைபொருள்	ஆயுதம்
56. ஐரோப்பிய விளையாட்டுமைதானம்	சுவிற்சலந்து
57. கர்த்தால்	கடையடைப்பு
58. பரிசுத்த எழுத்து முறை	இரோகினிபிக்ஸ்
59. நல்ல நீர்க்கடல்	பல்ரிக்
60. கரவன்	வர்த்தகர் கூட்டம்
61. சீனரின் கலாச்சார நகரம்	நாங்கிங்
62. சுடலரசன் மணமகள்	வெனிஸ் நகரம்
63. நேரத்தின் கள்வன்	தாமதம்
64. தனித்துவராவது	துன்பம்
65. கற்பனையிலும் பெரியது	உண்மை
66. புதிய ஏற்பாடு	பைபிள் 2 பாகம்
67. புத்தகங்களுட் புத்தகம்	பைபிள்
68. செல்வந்தர் வீதி	வால்ட்ஸ்றீற்
69. நூறு இலட்சம்	ஒருகோடி
70. இந்தியத் தானியம்	சோழம்
71. காட்டுக் காய்ச்சல்	மலேரியா
72. பால்கொடுக்கும் பறவை	வெளவால்
73. செயற்கை வெண்ணெய்	மாசறைன்
74. சீமை இலந்தை	அப்பிள்
75. புகையிலையின் நஞ்சு	நிகொடையின்

1980 யூன் மாத நிகழ்ச்சிகள்

4	புதன்	— வண்ணை வீரமாகாளி கொடி
8	ஞாயிறு	— நல்லூர் சங்காபிஷேகம் தண்டிகைத் திருவிழா
9	திங்கள்	— ஏகாதசி விரதம் புதூர் நாகதம்பிரான் பொங்கல்
10	செவ்வாய்	— பிரதோஷ விரதம்
11	புதன்	— கார்த்திகை விரதம். திருநெல்வேலி முத்துமாரியம்மன் கொடி
12	வியாழன்	— அமாவாசை விரதம்
14	சனி	— நயினை நாகபூஷணி கொடி
15	ஞாயிறு	— தமிழ் ஆனி முதல்
19	செவ்வாய்	— ஆயிலியம்
18	புதன்	— இணுவில் கந்தர் கொடி
19	வியாழன்	— இரவு நடேசர் அபிஷேகம்
20	வெள்ளி	— சதயம் ஆனி உத்தராதரிசனம்
23	திங்கள்	— மாவை சங்காபிஷேகம் தண்டிகை
24	செவ்வாய்	... ஏகாதசி விரதம்
25	புதன்	... பிரதோஷ விரதம்
28	சனி	... பூரணை விரதம்

மில்க்வைற்

சலவைப்

பவுடர்

கவர்ச்சிகரமான மட்டைப் பெட்டிகளில் விற்பனையாகின்றன.

மாணவிகளின் சீருடைகளைப் பால்போல் வெண்ணிறமாக்குவதற்கு மிகவும் சிறந்தது.

நீலம் கலந்த இந்தப் பவுடர் துரிதமாக அழுக்கை நீக்குகிறது.

வெந்நீரில் சிறிதுநேரம் ஊறவிட்டால் வெண்மை அதிகமாகும்.

உடனடியாக உபயோகித்துப் பாருங்கள்.

மில்க்வைற் சலவைப் பவுடர்

Divine Life for Children

God Loves You

— Swami Sivananda

God loves you. He gives you many good things. He gives you food to eat and clothes to wear. He has given you ears to hear, eyes to see, a nose to smell, tongue to taste, hands to feel and work and legs to walk.

You cannot see God with your fleshy eyes but He sees you. He takes care of you. He knows all that you do.

He is very kind to you. Love him. Praise Him. Sing his name and glory. Pray to Him to keep you away from all sins. He will be pleased with you. He will bless you.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவரி திரு. தி. நாகரத்தினம், யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவரி "சிவநெறிப்புரவலரி" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்; க. சி. குலரத்தினம் 1-6-80

ஓ
சிவமயம்

கடவுள் வணக்கம்

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

திருவிடைமருதூர்
திருக்குறுந்தொகை
திருச்சிற்றம்பலம்

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்று மெந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே.

திருச்சிற்றம்பலம்

திருக்கொன்றை மலர்மாலையையும் வில்வத்தளங்களையும் ஊமத்த மலர்களையும் சேரத் தம்பொலிவு பெற்றுத் திகழும் சடையிலே வைத்தருளியவரான திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள இறைவனை என்றும் நன்றுகக்கைகூப்பித் தொழுவார்களின் வினைகள் நாசமாகிவிடும்

திருவிடைமருதூரான்

அந்த இடைமருதின் ஆனந்ததேன் என்று பாடியருளிய அப்பரடிகள் திருவிடைமருதீசனைப் பலபதிகங்களிற் போற்றியுள்ளார். திருவிடைமருதீசனைப் பணிந்தால் வினைகள் நாசமாகும் என்று பலமுறை அருளினர்.

திருவிடைமருதீசனை வானவரும் வேதமுறைப்படி வணங்குவர். வணங்குபவர்களுக்கு வானவர் செல்வம் கிடைக்கும். பிறவித்துயர் நீங்கும். தம்மை வணங்குவோரின் வினைகளைத் தீர்ப்பவர் மருதீசர். அவர் எட்டுத் திசைகளுக்கும் இறைவனானவர். அவரை விண்ணுளாரும் மண்ணுளாரும் விரும்பிப் போற்றுவர். அவர் திருநீற்றை நிறையப் பூசுபவர். வாசனை பொருந்திய மலர்மாலைகளை அணிபவர். அவர் வேதமோதுபவரி. பூதங்கள் பாடத் தாம் ஆடுபவர். அவர் ஆன்மாக்களுக்கு வருகின்ற துன்பந்தீர்க்கும் புனிதர் அவரையடைந்த அன்பர்களுக்கு அவர் கனியிலும், கற்கண்டிலும், பெண்களிலும், பேரரசிலும் பார்க்க இனியவர் - பெரியவர். தம்மையடைந்தவர்களுக்குப் பெரும்போகமாயுள்ளவர். இளம் பிறையைச் சூடிய முதல்வர். இராவணன் மலையைப்பெயர்க்க முனைந்த போது திருவிரலால் அவன் வலிமையை அடக்கியவர். இடபக் கொடியேந்திய வீரர் தம்மை மனத்தினுள்நினைப்பவர்க்கும் அருள்புரிபவர். வினைகளைத் தீர்ப்பவர்

சூது

சூதாட்டம்

உடை செல்வம் ஊண் ஒளி கல்வி என்று ஐந்தும் அடையாவாம் ஆயங் கொளின்.

சூதாட்டத்தை ஒருவன் மேற்கொண்டால் உணவு, உடை, பொருள், புகழ், கல்வி என்னும் ஐந்தும் அவனைச் சேராவாம்.

GAMBLING

One will never get food, clothes, wealth, fame and learning if one takes to gambling.

சூதினால் வரும் கேடு

சூதினால் வந்த கேடுகளை நளன் கதையிலும் பாரதக் கதையிலும் படித்தவர்கள் விளையாட்டுக்காயினும் பொழுதுபோக்குக்காயினும் சும்மாவாயினும் ஆடார். ஆடார். பஞ்சமா பாதகங்களில் ஒன்றான சூது, ஒருவனுக்கு அறம் பொருள் இன்பங்களைக் கொடுக்கமாட்டாது. பொருள் பண்டம் பெயர் புகழ் எல்லாவற்றையும் கெடுத்து விடும். சூது கள்ளுக்குச் சமமானது. மரியாதையைக் கெடுப்பது. சூதினால் ஒன்றைப் பெறலாமெனின் அதனால் நூறை இழக்கவேண்டிவரும். சூதில் வெற்றியடையக் கூடிய வீரனும் அதனை விரும்பலாகாது. சூது சிறுமைகளை உண்டாக்கிவிடுவதோடு பெருமைகளை அழித்துவிடும். சூதாடுவதால் மூதேவியின் சகவாசம் உண்டாகும். பொய் பேசச்செய்யும். அருளைக் கெடுக்கும், துன்பத்துக்குமேலி துன்பத்தை உண்டாக்கும்.

சூது விரும்பேல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
பாடுறு வளமெலாம் பறித்திடும் சூது
இன்னு தவற்றுள் இன்னாதது சூது
தக்கோர் பரியத் தகாதது சூது
வஞ்சமும் போரும் வளர்ப்பது சூது
கேட்டின் வித்தாய்க் இளர்வது சூது

வேசியர் வீடும், கள்ளுக்கொட்டிலும் சூதுமனையும் மனிதகுலத்தைக் கெடுக்கவந்தவை.

பாரதி வீதியில் பாரதி சிலை

கோண்டாவில் மேற்கிலுள்ள பாரதி வீதியில் அவ்வூரவர் நிறுவிய பாரதி சிலையை மில்க்வைற் தொழிலதிபர் சென்ற 17-5-80 சனிக்கிழமை திரைநீக்கம் செய்தார்.

அமரகவி சனசமூகநிலையத் தலைவர் இரத்தினம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்த பெருவிழாவில் [illegible] நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

★ மௌனம் ஒன்றே கோபத்தைத் தணிக்க வல்லது ★

★ நாவலர் நினைவுகள் ★

சைவப் பிரசங்கத்தின் பயன்

சைவப் பிரசாரகரி மிகுந்த ஊக்கத்தோடு வெள்ளிக் கிழமை தோறும் செய்து வந்த சைவப்பிரசங்கம் பிராமணர், வித்துவான்கள், பிரபுக்கள் என்னும் வேறுபலரி செய்யும் பிரசங்கங்களினும் கடினமான விடயச் செறிவுள்ளதாய், பல நூல்களின் சாரமாய், இம்மை மறுமைப் பயன்களைத் தருவதாய், காதுக்கினியதாய், கேட்போருக்கு இனிது விளங்குவதாய் இருந்ததால், பொதுமக்கள் நெடுந்தூரத்துக்கப்பாலிருந்தும் செட்டியாரி சிவன்கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனஞ்செய்து பிரசங்கங் கேட்டின்புற்று மீள்வது வழக்கமாயிருந்தது.

சைவப் பிரசாரகரி தையலிநாயகி சமேத வைத்தீசுவரப் பெருமானைப் பணிந்து அவர் திருவருளைப்பெற்று, கடவுள் வாழ்த்து, சிவசின்னங்கள், சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கை நிலையாமை, சிவதீட்சை, மகளிர் ஒழுக்கம், இகபரசிலாக்கியங்கள், தருமம், செய்ந்நன்றிபறிதல், பிசுகுவிடுதல், கல்வி கற்பித்தல் பசுக்காத்தல், பிரபஞ்சமாயை, பேதமை, கொல்லாமை, நீதசிகாமணி, கடவுள் ஒருவருண்டெனல், அறிவொழுக்கங்களிற் சிறந்தோரை அண்டி வாழ்தல் முதலியனபற்றிப் பேசிவந்தார்.

சைவப்பிரசாரகர் சிரமப்பட்டுப் பேசியவற்றைக் கேட்டுவந்த பலரி தங்கள் தங்கள் வழியிற் குறைபாடுகளை நீக்கி நல்வராளுனர்கள். மாமிச போசனஞ் செய்துவந்தவரி பலர் அதனை விடுத்துத் தாவரபோசனஞ் செய்வாராயினர்; சிவதீட்சையின்றி வாழ்ந்தோரி பலர் அதனை முறைப்படி பெற்றுச் சந்தியாவந்தனஞ் செய்துவந்தனர். உருத்திராக்கந் தரிக்காமல் ஆலயஞ் சென்றவரி பலரி உடனடியாக அதனைத் தரித்துக்கொள்ளத் தொடங்கினர்கள். திருக்கோயில்களில் தோத்திரஞ் சொல்லக் கூசித்தூண்களின் பின் மறைந்தவரி பலர் பண்ணோடு பாடத்தொடங்கினர்கள். ஒருபோதும் திருக்கோயில் போகாத பலர் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், கார்த்திகை, அமாவாசை, பௌர்ணமை, மாசப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களில் சுவாமி தரிசனஞ் செய்யத் தொடங்கினர்கள். பலர் நியமமாகத் தினந்தோறும் திருக்கோயில் தரிசனஞ் செய்து வந்தார்கள்.

இன்னும் திருக்கோயில்களில் திருத்தொண்டுகள் செய்யாத பலரி அங்குப் பலவித பணிகளைச் செய்து வந்தார்கள். சுவாமி காவுதல், தீப்பந்தம் பிடித்தல், பட்டுக்குடை பிடித்தல், சாமரை வீசுதல், சிவநாமஞ்சொல்லுதல் முதலிய பணிகளை எல்லோரும் தாம்முந்தி தாம்முந்தி என்று முன்னின்று செய்து மகிழ்ந்தார்கள்.

இன்னும் தருமசிந்தையில்லாது தாமுண்டு தம்குடும்பமுண்டு என்று வாழ்ந்தவரி பலர் ஏழைகளுக்கிரங்குதல், அன்னதானஞ் செய்தல், அநாதரர்களை ஆதரித்தல் முதலிய வற்றிற் சிறந்து விளங்கினர்கள். இவ்வாறுகப் பலரி தங்கள் கடமைகளை உணரிந்து அவற்றைக் கிரமமாகச் செய்து ஒழுகந்தவருது வாழத் தொடங்கினரிகள். கல்விச் செல்வமே மேலான செல்வம் என்று சொலிலக்கேட்டவரி பலரி கல்வியில் அதிகநாட்டங் கொண்டாரிகள்.

சமூகப்பணி, பொதுப்பணி செய்யாது சுயநலமுள்ளவராய் வாழ்ந்த பலர் தண்ணீர்ப் பந்தரமைத்தல், நிழல் தருமரங்கள் நாட்டுதல், ஆவுரிஞ்சுகல் நாட்டுதல், கேணிகள் கட்டுதல், சுலமதாங்கி அமைத்தல் முதலியன செய்து சற்சனரர்களோடு கூடிவாழத் தலைப்பட்டனரி.

நாவலரி அவரிகளின் நன்மாணாக்கரி பலரி செய்த பன்முகப் பணிகளும் அப்பணிகளுக்கு அளித்த நிபந்தங்களும் உருக்குலையாமல் உலகுக்கு உபகரிக்குமாறு செய்யவல்ல உத்தமரிகள் முன்வருவாரிகளாக.

பனையோலை வாரும் இயந்திரம்

தொழில்கள் பல யந்திரமயமாகும்போது பின்னவேலைக்குப் பனையோலை வாருவதற்குக் காம்புச் சத்தகத்திலும் பார்க்கப் பயன்தரும் இயந்திரம் ஒன்று தமிழ்நாட்டிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பை உள்ளூர்க் கம்மியரிடம் காட்டி விளக்கி அதுபோன்ற யந்திரங்கள் பலவற்றைச்செய்து வடபிரதேசமெங்கும் மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்துவருவதோடு அதனை இலகுவாக இயக்கவும் தம் நண்பர்களைக்கொண்டு பழக்கி வருகின்றனரி.

தலைவரிப்பணம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கள் அமைப்பதற்கு ஊரிமக்களே உதவிசெய்தல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இதனால் 1848ஆம் ஆண்டின் சட்டப்படி பதினெட்டு வயதுக்கு மேறிபட்டு 60 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் தேசநன்மைக்காகத் திறக்கப்படும் தெருக்களில் ஆறுநாள்கள் வேலைசெய்தல் வேண்டும் அன்றேல் பதின்மூன்று பணமும் நான்கு வெள்ளிச் சல்லியும் இறுத்தல் வேண்டும்.

பாடசாலைகள் சனசமூக நிலையங்கள்

நாங்கள் பாடசாலைகளுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் ஆயிரக்கணக்கான பிரதிகளை இலவசமாக அனுப்புவதோடு தபாற்செலவினையும் பொறுக்கமுடியாது என்று வேண்டுகோள் செய்ததைக் கேட்டுத் தபாற்றலைகள் (முத்திரைகள்) அஞ்சலுக்கான அரசபணி உறைகள் லேபல்கள் அனுப்பியவர்களுக்கு நன்றி. இதுவரை அனுப்பாதவர்கள் இவற்றில் ஏதாவது அனுப்பினால்தான் நாம் தொடரிந்து மில்க்வைற் செய்தியை இலவசமாக அனுப்பமுடியும்.

★ எமக்கு வாய்ப்பன யாவும் எமது வினைப்பயன் ★

மதுரையாதீன முதல்வர்

செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநகரும் திருவால வாய், கூடல், கடம்பவனம் முதலிய பல திருநாமங்களால் வழங்குவதுமான மதுரையின் திருஞானசம்பந்தர் மடம் மிகவும் பழமைவாய்ந்தது.

இற்றைக்கு 1200 ஆண்டுகளுக்குமுன் பாண்டிநாட் டுக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தங்கியிருந்த மடம் இன்றுவரை சிவஞானபீடமாய் நிலவி வருகின்றது.

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இருநூற் றுத்தொண்ணூற்றேராவது முதல்வராகப் பீடமேறிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் பல் லாண்டு ஞானச்செங்கோலி செலுத்தியருளியபின் சென்ற மாதம் முத்தியடைந்துள்ளார்கள்.

திருவருள் தவயோகியாகிய பரமாசாரிய சுவாமிகள் செய்தருளிய பெரும்பணிகள் பலவாகும். அண்மையில் உலகசமயக்கணக்கர் தம்திறன் கேட்பதற்காக இவர் சென்னையில் இராஜாஜி மண்டபத்திற் கூட்டிய பேரவை யினால் இவரிபுகழ் பெரிதும் பரவலாயிற்று.

சுவாமிகள் அவ்வப்போது நாடு நகரம், காடு கரம்பை எங்கும் எழுந்தருளிப் பேசியருளியவை தேசத்தில் சைவப்பாரம்பரியம் வளர்வதற்குப் பெரிதும் உதவியாய் இருந்தன. இவர் எழுதி வெளியிட்ட நூல்களின் மாட்சி யும் பெரிது.

கடவுளுக்கும் உயிர்களுக்குமுள்ள உறவு
விக்கிரக ஆராதனையின் விளக்கம்
மரணபயம் தீரும்வழி
திருநீற்றின் பெருமை
அற்புதச் செயல்கள்
உருவ வழிபாட்டின் விளக்கம்
துன்பம் துடைக்கும் வழி
சமயமும் மனச்சாந்தியும்
புண்ணிய பாவ விளக்கம்
இந்துசமய உண்மைகள்
கடவுள் நிரூபணங்கள்
பிறப்பிலும் இறப்பிலும் உள்ள தெய்வ ரகசியம்.

இவையும் இவைபோன்ற இன்னும் பலவாய நூல் களையும் இனிய தமிழில் எழுதியதோடு, பாரதநாட்ட வரி பலரும் படித்தறிதற்பொருட்டு ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார். இவை ஆங்கிலம் வழங்கும் தேசங்கள் எங்கும் வியாபகமுற்றுச் சுவாமிகளுக்கு மங் காப் புகழைக்கொடுத்தன.

God and Creation in Hinduism The only solution for World Peace Fundamentals for Peace and Contentment. How Hinduism Unifies word religious Spiritual Regeneration.

இவையாவும் ஒருபுறமாகச் சுவாமிகள் அண்மையில் எழுதிய Hindu Yogis Astounding Discoveries என் னும் பெரியநூல் முந்நூற்று இருபத்தேழு பக்கங்களைக் கொண்டது. இந்நூல் ஒருவனைத் தன்னையறிந்தின்பமுறச் செய்வது. தன்னையறியாமலே உலகத்தலைவர்களும் உல கத்தவரும் இன்று தலைதடுமாறுகின்றார்கள்.

இதனையுணர்பவர் உலகத்துக்கு ஒரு கருத்தா உளர் என்றும் நாமெல்லோரும் அவர்தம் குழந்தைகள் என் றும் உணரப்பெற்று, உலக சகோதரத்துவம் நிலவ ஒருமைப்பாடு காண்பதற்குத் துடியாய்த்துடிப்பர்.

மனிதகுலத்தின் மாண்பினை அறியாது வடக்கு கிழக்கு, கறுப்பு வெள்ளை என்று பேசிக்கொண்டு தார்மீகமும் கூட்டுச்சேராக்கொள்கையும் பேசுவதிலாம்பயன் ஒன்று மில்லை. வெயிலில் துடித்தவனுக்குத் தென்னைமர நிழல் ஆறுதலளித்தமைக்காக, அவன் ஆலமரநிழலை அறியாது தென்னை நிழலே நிழல் எனல் தவறு.

இற்றைக்குப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கையாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீனத்துக் கல்வி நிலையங்கள் சுவாமிகளை வரவேற்று வாழ்த்திப் பாடிய பாடல் ஒன்றை நாமும் படித்து அவரை நினைவு கொள்ளுவோமாக.

"தெய்வத் தமிழார் வையைநதி
தேக்கு மருளில் தென்பாண்டித்
திருநாட் டுயருந் திருமதுரைத்
தேவே ஞான சம்பந்த
சைவக் குரவ! திருவரு ளாம்
தவயோ கஞ்சேர் சிவயோகம்
சாற்றும் புகழின் திருவுருவே
சாற்றும் ஆல வாய்முதலாய்
உய்வைப் பெருக்கி ஞாலமெலாம்
ஓங்கச் செய்யும் அருளாள!
உயரும் சோம சுந்தரனை
உவந்தே காட்சி தரும்புகழோய்
மெய்வைத் திடுஞ்சொல் உடையோனே
மேலா நின்னருள் முடிச்சூடி
மிளிரும் அருளே பெற்றிடவே
மெய்யிற் பணிந்து போற்றுவமே.

சென்ற நூற்றாண்டில் கொள்ளைநோயும் பஞ்சமும்

யாழ்ப்பாணத்தில் என்றுமில்லாத அளவு பயங்கரமாக நிலவிய கொள்ளை நோயும் பஞ்சமும் ஆறுமுகநாவலரை வெகுவாக உருக்கிவிட்டது. அவர் 1877-ஆம் ஆண்டு செய்த சமூகத்தொண்டு மிகவும் பெரியது. அக்காலத்தில் அரசாங்க அதிபராக இருந்த தனைனம் துரைமீது அவர் காரசாரமாக எழுதிய கண்டனங்கள் பல. துனைனம் துரை ஆறுமுகநாவலரை வெகுவாக அஞ்சினார். உணவு கிடைக்காமல் பொதுமக்கள் பலர் புல்லையும் தின்றார்கள். அக்காலத்திலேதான் நாவலர் கஞ்சித்தொட்டித் தருமம் நடத்தி எல்லோருக்கும் கஞ்சிகொடுத்தார்.

கடவுட் சிரத்தையே ஆன்மீக ஏணியின் முதற்படி. தெய்வீக அருள் பெறுவதற்கு அது உண்மை நாடுவோனில் நம்பிக்கையை ஊக்குகிறது.

— சுவாமி சிவானந்தர்

சேக்கிழார் நினைவு:

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் பெரியபுராணமும்

தமிழ்ப்பெரியார் என்று புகழ்பெற்ற திரு. வி. க. அவர்கள் இளமையில் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே மேலைப்புலோலி திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் பெரியபுராணப் பிரசங்கங்களில் ஈடுபட்டு அவரிடம் முறையாகப் பெரியபுராணத்தைப் படித்து அதற்குக் குறிப்புரை எழுதி அதனைச் சுத்தமாக அச்சிட்டுள்ளார். இன்னும் நாயன்மார்திறம் என்றொரு நூலும் எழுதி வெளியிட்டுள்ளார். நவசக்தி ஆசிரியராயிருந்த காலத்தில் இவர் எழுதிய இந்நூலில் நாயன்மார்களின் ஒழுகலாறுனை செயல்களின் உண்மைக் கருத்துக்களை யாவரும் படித்துணரும்படி எழுதியுள்ளார். இதனைக்காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தார் வெளியிட்டுள்ளார்கள்.

ஆறுமுக நாவலர் பெரியபுராணத்திலும் சேக்கிழாரிலும் கொண்ட பெருமதிப்பு பாரம்பரியமாக அவர் மாணவர் தியாகராச பிள்ளையையும் பற்றிக்கொண்டது. தியாகராசபிள்ளையின் நன்மாணாக்கர் மேலைப்புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டில் பெரியபுராண விரிவுரை செய்தபோது, அவரை விடாது தொடர்ந்து கேட்டுத் தம்வயமிழந்தவர்களுள் தமிழ்ப்பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் ஒருவர். அவர் யாழ்ப்பாணக் கலாசாரத்தை வியந்து எழுதிய வாசகம் பெரிது.

கடவுளில் நிறை நம்பிக்கை வைத்திருக்க. எல்லாப் பயம், பொறுப்பு, கவலை முதலியவற்றைக் கைவிட்டு நிறை ஓய்வுகொள்க.

— சுவாமி சிவானந்தர்

மட்டக்களப்பில் நாவலர் விழா

மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவு பாலையடி விக்னேஸ்வரர் ஆலய வீதியிலமைந்த திறந்தவெளி யரங்கில் சென்ற 2-3-80 ஞாயிற்றுக்கிழமை நாள்முழுவதும் நாவலர் பெருவிழா நடைபெற்றது. நாவலர் உருவப்படம் முத்துச்சப்பரத்தில் நடுநாயகமாக இருந்தது. இன்னொரு படம் ஊர்வலமாக எடுத்துவரப்பெற்றது. மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலை அதிபர், ஆசிரியர் மாணவர் என்றித்திறத்தார் மதவேறுபாடு கருதாது பங்குபற்றிச் சிறப்பித்தார்கள்.

காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, கற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, வீரமுனை, கோரக்கர் கோயில், அட்டப்பளம் முதலான ஊரினர் பேரபிமானங்கொண்டு கடலலை போல் திரண்டுவந்து பங்குபற்றினர்கள். பாடசாலைச் சிறுவர் சிறுமியர் வெறும் வாய்ப்பேச்சில் அமையாது பூசை நடனம், சிலம்பொலி நாடகம், பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, குழுநடனம், கொம்புமுறி நடனம், கரக நடனம், சங்கீதக்கச்சேரி, கதாப்பிரசங்கம் முதலான கலைநிகழ்ச்சிகளில் தங்கள் அபிமானத்தையும், ஆற்றலையும் இயல்பூக்கத்தையும் ஈடுபாட்டையும் உவப்பினையும் உள்ளன்போடு ஊராருவப்ப எல்லோரும் செய்து காட்டினர்.

அட்டமங்கலத்துடன் அலையலையாகத் திரண்டுவந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களைத் தமது சிரமத்தையும் பாராது பகலிரவாக நின்று வழிநடத்திய கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மடத்துச் சுவாமியார் ஜீவனுணர்ந்த அடிகளாரின் தவப்பொலிவுபெரிது. வந்தவர்க்கெல்லாம் வயிறார உண்டிகொடுத்த விழாவமைப்பாளர் வள்ளன்மை மிகப்பெரிது.

நாவலர்மீது ஜீவனுணர்ந்த சுவாமிகள் கொண்டுள்ள பேரபிமானம் பரம்பரையாக வந்தது. சுவாமி விபுலானந்தரிடம் தாம் கேட்டறிந்தவற்றை எம்மோடு கலந்துரையாடியபோது நாம் கைகட்டி வாய்பொத்திப் பிற்றை நிலை முனியாது கேட்கவேண்டியவரானோம்.

விழாவைச் சிறப்பிப்பதற்கும் மட்டக்களப்பில் மூன்று நாட்கள் தங்குவதற்கும் சென்ற மில்க்வைற் தொழிலதிபருக்கு அங்கே பெரிய வரவேற்புக் காத்திருந்தது. அவரி விழாவிற் பங்குபற்றியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கியதோடு, வந்திருந்தோருக்கும் தம் பிரசுரங்களை வாரி வழங்கினர்.

திருவாட்டி நாகம்மா கனகராசா, செந்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அண்ணு தொழிலதிபர் நடராசா, செய்தியாசிரியர் முதலானோரும் விழாவில் பங்குபற்றினர்கள். அங்குள்ள மாதர் சங்கத்தார் பண்டிதை அவர்களுக்குத் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்தனர்.

ஆறுமுகநாவலர் பரம்பரை காரைதீவிலும் படர்ந்துள்ளது. நாவலர் மாணவர் பரம்பரையில் தியாகராசபிள்ளை, மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை, மட்டக்களப்பு வைத்திலிங்க தேசிகர் வழியில் கணபதிப்பிள்ளை ஆசிரியர் என எண்ணிப்பார்க்கலாம் தானே.



நம்பமுடியவில்லை

வர்த்தகத்துறையில் மெத்தப் பிரகாசித்துச் சக்கர வர்த்தி எனப் பட்டஞ்சூட்டப்பெற்ற திரு. சிவக்கொழுந்து சின்னத்துரை அவர்கள் அறுபதாண்டு கண்டார் என்று சஷ்டியப்தபூர்த்தி என்னும் மணிவிழாக் கொண்டாடினர்கள். ஆளைப்பார்த்தால் அறுபதாகத் தெரியவில்லை. நாற்பதுக்குள் மதிக்கக்கூடிய இவரைக் கிழவனுக்கு இணுவிலில் உள்ள அவர் மாளிகையில் நல்லூரதீன முதல்வர் ஆசியுடன் விழாக் கொண்டாடினர்கள்.

மில்க்வைற் தொழிலதிபர், அண்ணு தொழிலதிபர், மலிரி ஓயில் நிறுவனம், ஐங்கரன் அரிசியாலை, ஞானேஸ்வரன் அரிசியாலை முதலானோர் வாழ்த்துப் பாடல்கள் படித்து வாழ்த்தினர்கள். மில்க்வைற் தொழிலதிபர் பஞ்சாக்கரப் பதிகம் பதித்து வெளியிட்டுச் சிறப்பித்து அவருக்குத் தேனிலூறிய நெல்லிக்காய்ச் சாடிகள் இரண்டை அன்பளிப்புச் செய்தார். சுபாஸ் சங்கரன் அவர்கள் பெரிய கேக் தயாரித்துச் சின்னத்துரை சோதிப்பிள்ளை தம்பதிகளைக் கொண்டு பங்குபிரிக்கச் செய்தார்.

பனங்கட்டி

வடஇலங்கையில் தரமான பனங்கட்டி தயாரிக்கப் பட்டதைத் தென்னிலங்கையர் இன்றுந்தான் போற்றுகின்றனர். பனங்கட்டியால் வடஇலங்கையில் பல்வேறு இடங்கள் புகழ்பெற்றதோடு, பெயர் பெற்றும் விளங்கின. சீனி ஒருசமயம் விலைகுறைந்ததாலும் பனங்கட்டி தயாரிப்பதற்கு அடுப்பு மூட்டினவர்கள், நிபுணர்கள் பனங்கட்டியை நீண்டநாள் வைத்திருக்க வழிவகைகளைக் கண்டுபிடியாமையாலும் மகத்துவமான சூடிசைத்தொழில் மண்மூடுண்டு போனதுமுண்டு. தென்னிலங்கையில இத்துள் இனிப்புக்கட்டிகள் சின்னஞ்சிறு வில்லைகளாகவும் பென்னம் பெருங் கட்டிகளாகவும் தயாரிக்கப்படுகின்றன. அவை பொலித்தீன் உறைகளிற் கவற்சிகரமாக விலையாகின்றன.

பெரிய முதலீடு செய்து ஆரம்பித்த தொழிற்சாலைத் தளபாடங்கள் கறள்பிடித்துப் பழுதாகிப்போவதன் முன் மீண்டும் பனங்கட்டி தயாரித்தல் நாட்டுக்கு நல்லதாகும். தமிழ்நாட்டினின்றும் நிபுணர் சிலரை வரவழைத்து ஆலோசித்தல் விரும்பத்தக்கதாகும் பரமகுடி, குமரப்பாபுரம் முதலிய இடங்கள் பனைப் பண்பாட்டை வளர்க்கின்றன.

மாணவர் சுற்றுடல் கல்வி

ருடால்ப் டீசல்

(1858 — 1913)

இன்று போக்குவரத்து வாகனங்களில் டீசல் இயந்திரங்கள் அதிகமாக உபயோகமாகின்றன. டீசல் என்னும் பெயரையுடையவர் இந்த நுட்பத்தைக் கண்டுபிடித்த காரணத்தால் இவை டீசல் இயந்திரங்கள் எனப்பெயர் பெற்றன.

டீசல் என்பவரின் முழுப்பெயர் ருடால்ப் டீசல் அவர் 18-3-1858-ஆம் நாளில் பிறந்தார். அவரின் தந்தையார் ஜேமன் நாட்டில் புத்தகம் கட்டும் தொழில் செய்து வந்தார். தாயார் ஆசிரியையாக இருந்தார். இவர்கள் ஜேமன், பிரெஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்றாக அறிந்திருந்தனர்.

ருடால்ப் டீசல் இளமையிலேயே இயந்திரங்களின் அமைப்புக்களை அறிந்து தொழிற்கருவிகளின் நுட்பத்தை ஆராய்ந்தார். அவர் இளமையிலேயே தொழில் நுட்பக் கல்லூரியிற் சேர்ந்து மூன்று வருடங்களில் திறமையுள்ள பொறியியலாளர் எனப் பட்டம்பெற்றார் பேராசிரியர்கள் அவரின் திறமையைப் பாராட்டினர்கள்.

அக்காலத்தில் இயங்கிய இயந்திரங்கள் எல்லாம் அதிக அளவு எரிபொருள்களை வீணாக்கி இயங்கின. நீராவியை உண்டாக்குவதற்கு ஏராளமான நிலக்கரி தேவையாய் இருந்தது. இங்ஙனம் அதிக எரிபொருள்களால் உண்டாக்கிய சக்தி மிகவும் குறைவாயும் இருந்தது. எனவே குறைந்த எரிபொருள் கொண்டு கூடிய சக்தியை உண்டாக்கக் கூடிய இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதில் ருடால்ப் டீசல் முயற்சி செய்தார்.

டீசல் 1879-ஆம் ஆண்டு முதலாக வான்லிண்டே என்பவரின் இயந்திர நிலையத்தில் வேலை செய்துவந்தார். அவர் 1892-ஆம் ஆண்டில் உள்ளெரியும் இயந்திரங்களின் முறையைக் கண்டுபிடித்தார். அவர்கண்ட முறை புதிதாக இருந்தது. அதனால் அவருக்குப் பெரும்புகழ் உண்டானது.

வெப்பத்தினால் இயங்கும் இயந்திரங்களுள் டீசல் கண்டுபிடித்த டீசல் இயந்திரம் சிறந்தது. அவர் இந்த இயந்திரத்தின் வேலை முறையை 1893-ஆம் ஆண்டில் விளக்கிப் பெரியபுத்தகம் எழுதினர்.

இனி டீசல் இயந்திரத்தைச் செய்வதற்கு அவருக்கு உதவி கிடைத்தது. அவர் 1895-ஆம் ஆண்டு இயந்திரத்தைச் செய்து முடித்தார். அதைக்கண்டு மகிழ்ந்த அவரின் மனைவி மாரித்தா அதற்கு டீசல் என்று பெயர் சூட்டினர்.

பல நாடுகளிலிருந்து பொறியியலாளர் டீசல் இயந்திரத்தைப் பார்க்கவந்தனர். சிலர் இயந்திரத்தில் குற்றங்கண்டுபிடித்தனர். சிலர் அதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். இவற்றை அறிந்த ருடால்ப் டீசல் வருந்தினர். எனினும் வருத்தத்தை வெளிக்காட்டாமல் தம் அலுவலில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். இன்று டீசல இயந்திரம் உலகப்புகழ்பெற்றது.

★ பக்தி பூண்ட மனதில் உலகப்பற்று ஒட்டாது ★

ஔவை அருந்தமிழ்

5. கீரைக்கறி தேவாமிர்தம் ஆனது

அன்று திருக்கோவலூரில் ஒரு வீட்டுக்குச் சென்று பெண் குழந்தைகள் இருவரால் உபசரிக்கப்பெற்ற கிழவி தான் ஔவையார் என்பதைக் குழந்தைகள் அறிந்தனர். அதன்பின் வீட்டுக்காரனுய அத்தணப்பெரியாரும் அவர் மனைவியாரும் ஔவையாரிடம் குழந்தைகள் யாவர் என் பதை இரகசியமாகக் கூறினர். பாரி இறந்த செய்தி கேட்டுப் பதைபதைத்து உள்ளம் நொந்த ஔவையார் அங்கவை சங்கவை என்ற குழந்தைகளை அன்புடன் தழுவி ஆசீர்வதித்தார். வரையாது கொடுத்த வள்ளல் பாரியின் பிள்ளைகள் வாழைபடி வாழைபோல் கன்றும் கனியுதவும் தன்மையை வியந்தார்.

அடுத்தநாள் அத்தணர் வீட்டில் பெரிய குதகலம் அவர் ஏழையாயினும் வந்தவரை உபசரிக்கும் பெரியவர். அங்கவையும் சங்கவையும் தங்கள் பிஞ்சுக் கைகளால் ஔவையாருக்குச் சமையல் செய்தூட்ட முயன்றனர். கொல்லையில் முளைத்து நின்ற கீரைச்செடிகளைக் கொய்து வந்து இலேவேறு தண்டுவேறுக வேகவைத்துக் கறிகள் சமைத்தனர். அவர்கள் அடிக்கடி தம்கைகளில் ஒலித்த கடகம் என்னும் ஆபரணங்களை ஒதுக்கி ஒதுக்கிக்கொண்டே சமைத்ததை ஔவையார் கவனித்தார். கடகம் செறிந்த கையாரின் அழகை நினைத்து உருகினர்.

சமையல் வெகுவிரைவில் நிறைவேறிற்று. பிள்ளைகள் இருவரும் ஔவையாரை நீராடச்செய்து முதலுள் இராப் பொழுதில் உலரவிட்ட ஔவையாரின் உடையை உடுக்கச் செய்து உணவளித்தனர். ஔவையார் உண்ணுந்தோறும் அருகிருந்து அன்புடன் ஊட்டினர். இது என்ன குழப்பு என்று ஔவையார் கேட்டார். கீரைக்குழம்பு பாட்டி என்று சொல்லிச் சொல்லி ஔவையாரை மகிழ்வித்தார் கள். அன்று ஔவையார் நிறையவுண்டார்.

வளையல்களை அணிந்த கைகளையுடைய அங்கவை, சங்கவை என்னும் பெண்கள்; வெப்பமுடையதாய், நல்ல வாசனையுடையதாய், விரும்பிய அளவு தின்றாலும் கேடுதி செய்யாததாய், நெய்யுடன் கலக்கப்பட்ட பசியநிறமுடைய கீரைக்கறி என்றுகூறி உண்மையிலேயே தேவாமிர்தத்தை இலையில் இட்டார்கள் என்று ஔவையார் பாடினர்.

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த — பொய்யா
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்தகை யார்.

கைத்தொழிலபிவிருத்தி முகாமையாளர்
லூதர் யேம்ஸ் செல்வராசா அவர்கள்
(23-6-1930 — 28-4-1980)

வடமாநிலக் கைத்தொழிலபிவிருத்தி முகாமையாள ரும், சிறந்த சமூகத்தொண்டரும், விளையாட்டு வீரரும் நல்லபிள்ளையுமான லூதர் யேம்ஸ் செல்வராசா அவர்கள் ரெனிஸ் விளையாடி வெற்றியீட்டிய குதகலமும் களைப்பும் சேர மாரடைப்பால் உயிர்நீத்த செய்தி எலோரையும் கலங்கவைத்தது.

யாழ்வளாக விலங்கியல் துறை விரிவுரையாளர் ராணி செல்வராணி M. Sc. அவர்களின் அன்புக் கணவரும், புவி யியல்துறைப் பேராசிரியர் கலாநிதி லூதர் ஜெயசிங்கம் அவர்களின அன்புச் சகோதரருமான செல்வராசா எல்லோ ருக்கும் தம்பி. தம்பி என்று சொன்னால் இலக்குமணன் போல எவருக்கும் ஏவல்செய்வதில் இன்பங் காண்பவர்.

நல்லமனமுள்ள செல்வராசா சிறந்த சமூகத்தொண்டன். பொறுப்பான உத்தியோகம் பெற்றநாள் முதலாக யாழ் பிரதேசம் எங்கும் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு முழுமூச்சாய் உழைத்தவர். ஊக்கப்படுத்தியவர். இது காறும் I. D. B. பகுதியார் ஆங்கிலத்திலும் சிங்களத்தி லும் வெளியிட்டுவந்த காமாந்தா என்னும் சஞ்சிகையைத் தமிழிலும் வெளியிடவேண்டுமென வழிவகுத்தவர். தமிழ் வெளியீடு வரமுன் அவர் மறைந்துவிட்டார்.

அவர் மறைந்தாலும் அவர் பணிகள் அவரைப்பற்றிப் பேசும். மில்க்வைற் தொழிலதிபரைப் பன்னவேலைப் பயிற்சிக்கான இயந்திரங்களைப் பிரதேசத்திற்கும் உபகரிக் கச் செய்தவர் அமரர் செல்வராசா.

அமரர் செல்வராசா அவர்களின் பணிகளிலொன்று வலி மேற்குப் பலநோக்குக் கூட்டுறவு விற்பனை பணையபி விருத்தி. அப்பகுதிப பண்டசாலை முகாமையாளர் உதவி யாளர் அமரரின் இறுதி யாத்திரையின்போது காட்டிய அபிமானம் பெரிது. அன்ற அரிமா என்னும் லயனஸ் கழ கத்தினரில் ஒருவரான அமரரின் பணியும் பெரிது.

அன்று 28-4-80 அவரின் இறுதி யாத்திரையின்போது கலந்துகொண்ட உறவர், அயலவர், நண்பர்கள், யாழ் செயலகத்தார், பொலிசுப்பகுதியார், கூட்டுறவுத்துறை யார், பலகலைக்கழகத்தார், அரிமாக்கழகத்தார் உறவினர் எல்லோருக்கும் திருமதி ராணி செலவராசா உள்ளம் நிறைந்த நன்றி கூறுகின்றார். அமரர் செல்வராசா அவர் களில் அபிமானமுள்ள அகில இலங்கை ரெனிஸ் விளை யாட்டு வீரர்கள் அவர்நினைவாக ஆண்டுதோறும் ரூண மன்ற போட்டி நடத்த ஒழுங்குசெய்து தொடங்கியுள் ளார்கள்.

ஒரு கருமத்தைச் செய்து ஒப்பேற்றுவதற்கு மேற் கொளளும் வழியகைகளைப்பற்றி யாம் கவனமாயிருந்தால் அதன முடிவும் தன்னைத்தானே கவனிக்கும். இதையே வழிவகைகளுக்கும் முடிவுக்கும் வித்தியாசமிலலையென இனனெரு வகையிற் கூறலாம்.

— மகாத்மா காந்தி

யோகாசனமும் பன்னவேலையும்

குளம் தோண்டுதலும், மரம் நாட்டுதலும், பணியபிவிருத்தியும் செய்வதற்குப் பல வருடங்களாகப் படாத பாடுபட்டுவந்த மில்க்வைற் தொழிலதிபர் இப்போது யோகாசனமும் பன்னவேலையும் பழகுவதற்கு ஓடித்திரிகினமூர் என்று நாடோடியாகப் பேசுகின்றூர்கள். தனி யொருவராய் நின்று இத்தனை சற்கருமங்களையும் செய்வதற்கு ஒருவருக்கு மனத்துணிவும் நேரமும் சம்பவித்தமை வாய்ப்புடைத்தாயிற்று. பணம்தான் எல்லோரும் தேடுகிறூர்கள். மத்திய கிழக்கில் சாதாரண உத்தியோகத்துக்கும் பத்தாயிரம் கிடைக்கிறதே. அதைப்பற்றி எவரும் கருதவில்லை. பணம் வரும் போகும். ஆனல் நமக்குவரும் பணத்தில் ஒருபகுதியைப் பொதுப்பணிக்கு விடுவது தர்மந்தானே.

எங்கே எங்கே பணியோலையை வாரிந்து பக்குவமாகப் பாய், கடகம், பெட்டி, நீற்றுப்பெட்டி முதலியன செய்கிறூர்களோ அவர்களுக்கு ஓலைவாரும் இயந்திரம் ஒன்றைத் தொழிலதிபர் உள்ளன்போடு வழங்கிவருகிறூர்.

எங்கே எங்கே யோகாசனம் பழகுவதற்கு மக்கள் — ஆண்கள் — பெண்கள் கூடுகிறூர்களோ அவர்களுக்கு அங்கெல்லாம் விளக்கம் அளிக்கவும், செய்துகாட்டவும், பிரசுரங்களை உதவவும் அவர் ஓடித்திரிகிறூர். நல்லமுறையில் யோகாசனத்தை விளக்குவதற்கு ஆண்கள், பெண்கள் முன்வந்து உதவிசெய்வதற்குக் காத்துநிற்கின்றூர்கள். சங்கங்கள் மூலம் எவரும் விண்ணப்பித்து உதவிகளைப் பெற்றுப் பயனடையலாம்

வவுனியாவில் யோகாசன வகுப்பு

வவுனியாவில் பெரிய மண்டபம் அமைத்துத் தமிழ்ப் பணி, சைவப்பணி, சமூகப்பணி புரிந்துவருகின்ற இந்து இளைஞர் மன்றத்தார் இருபெரு வைத்தியகலாநிதிகளைக் கொண்டே யோகாசன மூலம் நோய்களை நீக்கலாம் எனப் பேசவைத்துள்ளார்கள். சென்ற 27-4-80 ஞாயிறு மாலை வவுனியாவில் நடைபெற்றவிழாவில் மில்க்வைற்தொழிலதிபர் யோகாசன வகுப்பை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். வந்திருந்தவர்களுக்குப் பல ஆசனமுறைகளைத் திரு. த. முருகானந்தம் செய்து காண்பித்தபோது திரு. R. B. பாலச்சந்திரன் விளக்கங்கூறினர்.

சிவதொண்டன் மகளிர் ஆச்சிரமம்

கொழும்புத்துறையில் சிவயோக சுவாமிகள் மகளிர் முன்னேற்றத்துக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் பயிற்சியளிக்கு முகமாக ஆரம்பித்த ஆச்சிரமத்தில், இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திருமதி இரத்தினு நவரெத்தினம் அவர்கள் தலைமையில் பெண்குழந்தைகள் சைவசமயப் பயிற்சிபெற்று வருகிறூர்கள்.

அவர்களின் பயிற்சி எவ்வளவு என்று பரீட்சித்தபின் பரிசளிப்பு விழா 30-5-80 வெள்ளி மாலை மங்களகரமாக நடைபெற்றபோது மில்க்வைற் தொழிலதிபர் அங்கே தமது வழக்கமான மரம்நாட்டும் பணியைச் செய்தபின் தலைமைவகித்துச் சிறப்பித்தார். இப்பணி மேலும் வளர்வதாக.

True Religion

— Swami Sivananda

Real Religion is religion of Atma
Real Religion is one
It teaches us to live in God
and attain Imortality
It removes the veil of ignorance
It enables us to realise the sublime
vision of unity of self
Religion is practical
It must become part and parcel
of your daily life.
Anihilation of egoism, deseres and likes
and dislikes, realisation of the self,
love for all beings, selfless service
to humanity with Atma Bhav
this is the essence of
True Religion.

அருள்விருந்து

(ஆதாரம்: தர்மசக்கரம்)

மௌனம் மனபரிபாகத்துக்கு முதற்படி.
பாவஞ்செய்கிறவனின் முதல் தண்டனை பயம்.
தத்துவதரிசனம் என்பது வாழ்வைப்பற்றிய கலை.
உயர்ந்த எண்ணம் அமைதியில் உண்டாகிறது.
பாபம் என்பது கடவுளைவிட்டு நீங்குதலாகும்.
ஆழ்ந்த எண்ணம் காந்தத்திலும் வலியது.
கொதிக்கும் உள்ளத்தில் பகுத்தறிவு இருக்கமாட்டாது
துன்பங்களுக்குப் பிறப்பிடம் ஆசை.
தன்னடக்கம் மனிதனுக்கு மேன்மையைத் தருகிறது.
தோல்வியை ஏற்கப்பழகாதவன் வெற்றிக்கு அருகதை இல்லாதவன்.

மநுதர்மம்

அரசு அறத்தின் வடிவமாய்ச் செங்கோல் செலுத்த வேண்டும்.

சுக்கிர நீதி

மக்கள், அரசன் தண்டனைக்கு அஞ்சித் தங்கள் கடமைகளிற் பற்றுடையவர்களாகின்றனர். இவ்வுலகத்தில் தன்கடமையிற் பற்றுடையவனே ஒளியுடையவனுகின்றூன்.

ஒருவனுக்குத் தன்கடமையே பெருந்தவமாகும். ஆதலின் தன் கடமையைச் செய்தலின்றி நன்மை உண்டாகாது. இடைவிடாது தம் கடமையாகிய தவத்தைச் செழிக்கச் செய்கின்றவர்களுக்குத் தேவரீகள் ஏவலாளரெனின் இந்நிலத்து மக்கள் எங்ஙனமாவர்?

நன்னித்தம்பி வைத்தியநாதன்

இறுதி யாத்திரை

மயிலிட்டியைச் சேர்ந்த நன்னித்தம்பி வைத்தியநாதன் எண்பத்தெட்டு வயதில் காலமானது மில்க்வைற் தொழிலதிபரை வெகுவாக வாட்டிவிட்டது. இந்த விழுகிழவனுக்காக இவர் கண்ணீர் வடிக்கிறரென்றால் காரணம் இருக்கவேண்டும். கிழவனார் 1979 வரை பெரிய மலை வேப்பங்கன்றுகளைக் பெயர்த்து கொட்டுகளில் நாட்டி மில்க்வைற் மரநடுகைக்கு உதவிவந்தார். அவர் உபகரித்த மரங்கள் வடபிரதேசமெங்கும் நிழல்கொடுக்கின்றன. மட்டக்களப்பில் முளைகொண்டு வருகின்றன. முன் யாழ்ப்பாணத்து ராசா என்று பெயர்பெற்ற டைக் என்னும் வெள்ளைக்கார அரசாங்க அதிபர் முப்பத்தெட்டு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தாரை நேசித்து நாட்டிய மரங்களே இன்று புயலுக்கு வீழ்ந்ததால் 25000 ரூபா வீதம் விற்பனையாகின்றவை.

நன்னித்தம்பி வைத்தியநாதனின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் அமரரின் பூதவுடலுக்குப் பனைக்கொடி போட்ட பெரிய போர்வை போர்த்து மலர்மாலை சூட்டி வணங்கி வழியனுப்பினர். மலைவேப்பமரங்கள் அமரர் வைத்தியநாதனின கதை பேசும். அவரின் நினைவு மலரையும் தொழிலதிபர் அச்சிட்டு வழங்கினர்.

மூலிகை மர்மம்:

கீழ்காய் நெல்லி

இதனை கீழாநெல்லி என்று பொதுமக்கள் வழங்குவதுண்டு. இதற்கு அலக்கை சுரம், அவகதவாய், இலஞ்சியம், சிவா, இமுட்டி தாமலகி, தாவி, பூதாத்திரி, வாகுனி, விஷவல்லி, முதலிய பெயர்களுண்டு. தெலுங்கர் இதை நேலச்சிரிசெட்டு என்பர். சித்தவைத்தியத்தில் பயன்தரும் மூலிகைகளுள் இதுவும் ஒன்று. உடல் வளர்க்கும் மூலிகைகளுள் இதுவும் ஒன்று

கீழ்காய்நெல்லி ஈரமிருக்கும் இடங்களில் செழிப்பாகவும், வரண்ட இடங்களில் கட்டையாகவும் வளரும் இப் பூடு தனித்தனியாக மிகச்சிறிதாக ஒருசாண் அளவில் வளரும். நெல்லியிலையைப்போல வரிசையாய் உள்ள சிறிய இலைகளின் கீழ் கடுகளவு காய்கள் வரிசையாய் இருக்கிறபடியால் கிழ்காய் நெல்லி என்பர்.

இது சொறி, சிரங்கு, கருங்குட்டம், படைகள் முதலிய தோல்நோய்களுக்கு நிகரற்ற மருந்து. இது உடம்புக்கும் நல்லது. ஈரல் சம்பந்தமான நோய்களுக்கு உயிர்தர மருந்தாகும். இதன் இலையைச் சிறிதளவு உப்புடன் சேர்த்து அரைத்துக் காமாலை நோயாளருக்குக் கொடுத்து வர நோய்தணிந்து குணமாகும்.

இதன் இலையை இடித்துத் தூளாக்கிச் சீனிப்பாணியில் சேர்த்துத் தேனும் நெய்யும் விட்டுக் கிழறி எடுத்து லேகியம் செய்வர். இதில் சிறிதளவு உட்கொண்டுவந்தால் தோல்நோய்கள் நீங்கும். மேகநீரால் உண்டாகும் நோய்கள் வரா.

கிழ்காய் நெல்லியில் கருவங்கச்சத்து உண்டென்றும், இதனை ஆணிவேரி அரும்மற் பிடுங்கிப் பிரசவ வேதனையுள்ள பெண்ணின் இடதுகால் பெருவிரலில் சுற்றி முடிக்கச் சுகப்பிரசவம் உண்டாகும் என்றும் கூறுவர்.

கிழ்காய்நெல்லிச் சமூலத்தைப் பாலில் அரைத்துப் பால்விட்டு உட்கொண்டால் சோகை, காமாலை, உடல் வெளுப்பு, வாதபித்தம் முதலியன நீங்கும். இரத்தம் உண்டாகும், கண்குளிரும்.

கிழ்காய் நெல்லியின் வேர், தண்டு, இலை என்பன பல நோய்களைத் தீர்ப்பனவாதலால் இச்செடியை வீட்டுவளவுகளில் அழியவிடாது பாதுகாத்தல் நல்லது.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவள்ளுவர் விழா

காலந்தோறும் திருக்குறள் மணிகளைக் கையடக்கமாகப் பிரசுரித்து வழங்கியும், தமது சவர்க்கார மேலுறைகளில் பிரசுரித்துப் பரப்பியும், சனசமூக நிலையங்கள்போன்ற பொதுவிடங்களில் தகரப்பலகைகளில் எழுதி நிலையாகத் தொங்கவிட்டும் திருக்குறளைப் பரப்பியவர் என்று பெரியவரிகள் பாராட்டுகின்றனர்.

தமிழ்மறைக் கழகத்தார் வேலணையில் மேமாத இறுதி நாள்களில் கொண்டாடிய பெருவிழாவுக்குத் தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் பேராசிரியர்கள் சிலர் வந்திருந்தனர். சுப மாணிக்கம் அவர்கள், இரா சாரங்கபாணி அவர்கள். மெய்கண்டார் அவர்கள் விழாவைச் சிறப்பித்தார். உள்ளூர் அறிஞர்கள். பேராசிரியர்கள், வண. தனிநாயகம் அடிகள் ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டனர். வள்ளுவரின் ஊர்வலத்துக்குப் படங்கள், திருக்குறள் போட்டுகள், கொடிகள் ஆகியவற்றை மில்க்வைற் தொழிலதிபர் வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும் கா. பொ. இரத்தினம் அவர்களின் புதிய படைப்பான 'தமிழ்மறை விருந்து' என்னும் நூலின் முதற்பிரதியை வண. தனிநாயகம் அடிகளாரிடம் பெற்றுச் சிறப்பித்தார்.

சமயதீட்சை

சுண்டிக்குளி சைவமகாசபையினரின் ஆதரவில் ஈச்சமோட்டை ஞானவைரவசுவாமி கோவில் மண்டபத்தில் 30-5-80 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சமயதீட்சையின் போது மில்க்வைற் தொழிலதிபர் பிள்ளைகளுக்கு நித்திய கருமவிதியும் பிறவும் வழங்கி வாழ்த்தினர். கல்வியதிகாரி மாணிக்கவாசகர் அவர்கள் தீட்சை பற்றிப் பேசினர்கள்.